கிண்ணியா பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 26 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 03 ஆம் திகதி தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கிண்ணியா பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபை காசு மற்றும் அட்டுறு அடிப்படைகளில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்திருந்தது. எனினும் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டது என்ற கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஊழியர் கடன் பதிவேட்டின் படி ஊழியர் கடன் மீதி ரூபா 1,765,429 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் ஊழியர் கடன் மீதி ரூபா 1,785,429 ஆகக் காணப்பட்டது. இதனால் ஊழியர் கடன் மீதி ரூபா 20,000 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பாதுகாப்பு வைப்பு பேரேட்டின் படி மீதி ரூபா 547,364 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் பாதுகாப்பு வைப்பு மீதி ரூபா 180,000 ஆகக் காணப்பட்டது. இதனால் பாதுகாப்பு வைப்பு மீதி ரூபா 367,364 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) புறநெகும செயற்திட்டத்திற்கான பிடிகாசு ரூபா 1,723,507 தொகையினை வைப்புக் கணக்கில் பதியாது ஏனைய வருமானமாக காட்டப்பட்டுள்ளமையினால் சபையின் வருமானம் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.3 செலுத்தவேண்டிய கணக்கு -

ரூபா 2,159,544 தொகையான ஓய்வூதியப் பங்களிப்பு மீதி கொடுத்துத்தீர்க்கப்படாது கடந்த 09 வருடங்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுவருகின்றது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 4,797,899 தொகையான பொறித்தொகுதி இயந்திரங்கள், மோட்டார் வாகனம் தளபாடங்கள் ஆகியவற்றுக்கான நிலையான சொத்துப் பதிவேடும் மற்றும் முற்பணக் கொடுப்பனவுக்கான காலப்பகுப்பாய்வும் பேணப்படவில்லை. இதனால் கணக்காய்வின் போது மீதியை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் பிரிவு 173 | சபையினால் மேற்கொள்ளப்படும் அனைத்து வழங்கல் சேவைகளுக்கும் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்த போதிலும் சபையினால் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் வாடகைக்கு வழங்கப்பட்ட 09 இறைச்சிக் கடைகள் மற்றும் மீன் சந்தைக் கடைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) மோட்டார் வாகன போக்குவரத்து சட்டத்தின் பிரிவு 203 | ஆண்டு தோறும் சகல வாகனங்களுக்கும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் பெறப்படல் வேண்டும். எனினும் பயன்படுத்தப்பட்டு வரும் 08 வாகனங்களுக்கு வருமான உத்தரவுப் பத்திரம் 2015 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2006 ஆம் ஆண்டு பெறுகை வழிகாட்டி இல 2.7.7 | சபையின் பெறுகைக் குழுவின் அங்கத்தவராக இருப்பவர் பெறுகை நடைமுறையுடன் தொடர்புடையவராக இருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதற்கு முரணான வகையில் சனசமூக உத்தியோகத்தர் அங்கத்தவராக நியமிக்கப்பட்டிருந்தார். |
| (ஈ) 2006 ஆம் ஆண்டு பெறுகை கைநூல் இல 3.4.2 இன் பிரிவு (a) I | கூறுவிலை கோரப்படும் போது தேவைப்படும் அளவு குறிப்பிடப்பட்டே கோரப்பட வேண்டுமென காணப்பட்ட போதிலும் சபையினால் அலகு ஒன்று எனக் குறிப்பிடப்பட்டே கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன. இவ்வாறு மேற்கொள்வதால் கிடைக்க வேண்டிய கழிவுகள் கிடைக்காமல் போவதற்கான சந்தர்ப்பம் காணப்படுகின்றது. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2017 திசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 2,707,431 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 1,015,331 ஆக இருந்தது. இதனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 1,692,100 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

## 2.2 வருமான முகாமைத்துவம்

### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதீடு ரூபா "000" | ஆண்டுக்கான வருமானம் ரூபா "000" | பெறப்பட்ட வருமானம் ரூபா "000" | 2017.12.31 இல் நிலுவை ரூபா "000" | பாதீடு ரூபா "000" | ஆண்டுக்கான வருமானம் ரூபா "000" | பெறப்பட்ட வருமானம் ரூபா "000" | 2016.12.31 இல் நிலுவை ரூபா "000" |
| வாடகை | 4,875 | 3,087 | 3,087 | 1,787 | 5,100 | 466 | 466 | 4,633 |
| அனுமதி பத்திர கட்டணம் | 3,210 | 1,303 | 1,303 | 906 | 950 | 2,186 | 2,186 | - |

### 2.2.2 வீதவரிகள்

1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 134 (1) ஆம் பிரிவிற்கு அமைய பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்களை இனங்கண்டு அவற்றிற்கான ஆண்டுப் பெறுமதியை மதிப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 இறைச்சிக்கடை குத்தகை

இறைச்சிக்கடை குத்தகையாளர்கள் குத்தகையை செலுத்தத் தவறும் போதே அவர்களது பாதுகாப்பு வைப்பிலிருந்து குத்தகைத் தொகையை அறவிடாமல் வருட இறுதியிலே இந்நடைமுறை பின்பற்றப்படுவதனால் ரூபா 6,444,365 தொகையான நிலுவை நிலுவைகள் அறவிடப்படாது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுவருகின்றது. மேலும் ரூபா 6,322,604 தொகையான நிலுவைகளுக்கு சபையினால் காலப்பகுப்பாய்வை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்காமையால் கணக்காய்வின் போது மீதியை உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது.

### 2.2.4 வாடகை வருமானங்கள்

#### கச்சக்கொடி தீவு பொதுச் சந்தைக் கட்டடத்தைக் குத்தகைக்கு வழங்குதல்

புறநெகும செயற்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 21,510,853 தொகைக்கு 2014 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட பொதுச் சந்தைக் கட்டடத்தொகுதியில் காணப்படும் 36 கடைகள் மற்றும் 32 திறந்தவெளிக் கடைகளை கிண்ணியா பிரதேச சபையானது வாராந்த சந்தை நடவடிக்கைக்காக கடை ஒன்றிடமிருந்து ரூபா 30,000 தொகையையும் திறந்தவெளிக் கடை ஒன்றிடமிருந்து ரூபா 20,000 தொகையுமாக ரூபா 1,720,000 தொகையினை மீளளிக்கத்தக்க வைப்பாக அறவிட வேண்டியிருந்த போதிலும் இன்றுவரை ரூபா 450,000 தொகையினை மாத்திரமே சபை அறவீடு செய்துள்ளது.

### 2.2.5 முத்திரைத் தீர்வை

2016 செப்தெம்பர் தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதிவரை பெறப்படக்கூடிய முத்திரைத் தீர்வை கணிப்பீடு செய்து அவற்றை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.6 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காக கட்டணம் அறவிடல்

சபையின் அதிகார பிரதேசத்தில் தனியார் நிறுவனங்களால் நிறுவப்பட்டுள்ள 05 தொலைத் தொடர்பு கோபுரங்கள் காணப்பட்ட போதிலும் இவற்றுக்கான கட்டணத்தைத் தீர்மானித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

அ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டத்தின் கீழ் ரூபா 15,865,932 பெறுமதிக்கு திண்மக்கழிவு சேகரிக்கும் நிலையம் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் சேகரிக்கப்படும் கழிவுகள் வகைப்படுத்தப்படாது அப்பகுதியில் கொட்டப்பட்டு வருகின்றது. மேலும் திண்மக்கழிவு பசளை தயாரிப்பதற்குரிய இயந்திரங்கள் சபையில் காணப்படாமையினால் அச் செயற்பாடு இன்றுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ஆ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்

2000 ஆம் ஆண்டு 53 ஆம் இலக்க மற்றும் 1988 ஆம் ஆண்டு 56 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டு 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 1533/16 இலக்க 2008 சனவரி 25 ஆம் திகதிய வர்த்தகமாணி அறிவித்தலின் பிரகாரம் மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து உரிமம் பெறப்படாது விலங்கறுமனைகள் நடாத்தப்படுகின்றது. மேலும் இங்கு அறுக்கப்படும் விலங்குகளின் இரத்தம் மற்றும் கழிவுகள் அருகிலுள்ள ஆற்றில் கலக்கப்படுதல் காரணமாக சுற்றாடல் மாசடைவதற்கு வழிவகுத்துள்ளது.

இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை எவ்வித அறிவினையும் கொண்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2008 தொடக்கம் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட ஓய்வூதியப் பங்களிப்புப் பணம் ரூபா 548,525 தொகையை விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு அனுப்பி வைக்க சபை இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மாகாண நிதி ஒழுங்கு விதி இல 163.3 இன் பிரகாரம் முற்பணங்கள் அனைத்தும் 10 நாட்களுக்குள் தீர்த்து வைக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 07 வருடங்கள் பழமை வாய்ந்த ரூபா 191,544 பெறுமதியான முற்பணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட ரூபா 540,412 பெறுமதியான முற்பணங்ககளும் இன்றுவரை சீர்செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண நிதி ஒழுங்கு விதி பிரிவு 187.2 இன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டும் ரூபா 2,106,258 கூட்டுமொத்த தொகையான 68 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் 2014 ஆம் ஆண்டில் ரூபா 3,253,657 கூட்டுத் தொகையான 44 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் காணாமல் போயிருந்த போதிலும் உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் இது தொடர்பாக உடனடியாக கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான

பிரதியுடன் மாகாண திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டிருக்காததுடன் இது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 ஆம் ஆண்டின் இருப்புக் கணக்கெடுப்பின் போது இருப்பு கணக்கெடுப்பு சபையால் சுட்டிக்காட்டப்பட்ட இருப்புப் பற்றாக்குறைகள் தொடர்பாக இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 மனிதவள முகாமைத்துவம்

இலங்கை அரசாங்கத்தின் தாபன விதிக் கோவையின் அத்தியாயம் XXIV இன் பிரிவு 4.4 இன் பிரகாரம் உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட கடன்களை முழுமையாக அறவீடு செய்ய முன்னர் அவ் உத்தியோகத்தர் மரணிப்பார் எனின் அவரின் வாரிசுகளுக்குச் சேரவேண்டிய ஓய்வூதியப் பணத்திலிருந்து கழித்துக் கொள்ளுமாறு ஓய்வூதியப் பணிப்பாளருக்குத் தெரிவித்தல் வேண்டும். இவ்வாறு சபை நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் 07 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 133,220 தொகையான கடனை சபையினால் அறவிடமுடியவில்லை.

3.4 சொத்து முகாமைத்துவம்

3.4.1 சொத்துக்களைப் பதிதல்

2008 தொடக்கம் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதிகளுக்கிடையில் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட 05 வாகனங்கள் சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.4.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டின் கீழ் பொது மலசலகூடம் ரூபா 1,000,000 தொகைக்கு நிர்மாணிக்கப்பட்டு ஒப்பந்தக்காரரால் 2016 திசெம்பர் 31 ஆம் திகதி கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இக் கட்டடம் இன்றுவரை பயன்படுத்தாது விளைவற்றுக் காணப்படுகின்றது.

3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபையில் 2011 சனவரி தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதியில் கடமை புரிந்த 13 ஊழியர்களுக்கான சேமலாப நிதிய பங்களிப்புப் பணம் ரூபா 462,112 தொகையையும் 2012 சனவரி தொடக்கம் 2013 ஓகஸ்ட் வரையான காலப்பகுதியில் கடமை புரிந்த 16 ஊழியர்களுக்கான சேமலாப நிதிய பங்களிப்புப் பணம் ரூபா 748,864 தொகையையும் குறித்த காலத்தில் செலுத்தத் தவறியமையால் தண்டப்பணம் ரூபா 540,770 தொகையை சபை செலுத்தியிருந்தது.

3.6 பெறுகை நடைமுறைகள்

3.6.1 பெறுகைத் திட்டம்

தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 128 ஆம் இலக்க 2006 மார்ச் 24 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டம் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.6.2 ஒப்பந்த நிர்வாகம்

3.6.2.1சுற்றுலா விடுதி மீள் நிர்மாணம்

மாகாண சபை மற்றும் உள்@ராட்சி அமைச்சின் பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் நடுத்தீவு சுற்றுலா விடுதி மீள் நிர்மாணம் செய்வதற்கான ஒப்பந்தம் ரூபா 1,999,875 தொகைக்கு நடுத்தீவு சனசமூக நிலையத்திற்கு 2017 ஒக்தோபர் 10 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 191,762 பெறுமதியான கீழ் குறிப்பிடப்பட்ட வேலைகள் கணக்காய்வுத் திகதியான 2018 மார்ச் 23 ஆம் திகதி வரை நிறைவு செய்யப்படாதிருந்த போதிலும் இவ்வேலைகள் திருப்திகரமாக செய்யப்பட்டதாக பொறுப்பான உத்தியோகத்தரால் கணியச்சிட்டை கொடுப்பனவிற்காக உறுதிப்படுத்தப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்தத்தின் பிரகாரம் இவ் மீன் நிர்மாண வேலைகள் 2017 திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யப்பட்டு சபையிடம் கையளிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2018 மார்ச் 23 ஆம் திகதி வரை வேலைகள் நிறைவு செய்யப்படாது காணப்பட்டதுடன் இக்காலதாமதத்திற்கான தாமதக்கட்டணம் ரூபா 49,000 தொகை அறவிடப்படாமல் அனைத்து வேலைகளும் 2017 திசெம்பர் 15 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டு சபையிடம் கையளிக்கப்பட்டதாக போலியான வகையில் கையளிப்பு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

3.5.2.2 திண்மக்கழிவு சேகரிப்பு நிலைய நிர்மாணம்

திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டத்தின் கீழ் ரூபா 11,406,212 பெறுமதிக்கு திண்மக்கழிவு சேகரிக்கும் நிலையத்திற்கு கம்பிவலையால் சுற்றுவேலி, சுற்றுச் மதில் என்பவற்றை நிர்மாணித்தல் மற்றும் மின் விளக்கு பொருத்துதல் போன்ற வேலைகளுக்கான உடன்படிக்கை ஒப்பந்தம் சபையினால் 2017 செப்தெம்பர் 07 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சுற்றுவேலி அமைத்தல்

(i) திண்மக் கழிவு சேகரிப்பு நிலையத்தினைச் சுற்றி 750m$^2$ அளவுடைய 3.2mm இற்கு குறையாத 10 கேஜ் (Gauge) கம்பி வலையே பயன்படுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 397,800 பெறுமதியில் 3mm அளவுடைய 12 கேஜ் (Gauge) கம்பி வலையை பயன்படுத்தி சுற்று வேலி அமைக்கப்பட்டிருந்தது.

(ii) கம்பி வலையின் கீழ்ப் பகுதிக்கு 12m$^3$ அளவுடைய ரிட்டேனிங் வோல் (Retaining Wall) நிர்மாணிக்கப்பட்டதாக ரூபா 144,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு பௌதீக செவ்வை பார்த்தலின் போது 1.12m$^3$ அளவுடைய ரிட்டேனிங் வோலே (Retaining Wall) நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எனவே இதற்கான மேலதிக கொடுப்பனவாக ரூபா 135,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மின் விளக்குப் பொருத்துதல்

(i) மின் விளக்கு பொருத்துவதற்காக கொங்கிரீட் தூண் பயன்படுத்தப்பட வேண்டுமென ரூபா 150,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் கொங்கிரீட் தூணைப் பயன்படுத்தாது GI Pipe மின் விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தது.

(ii) மின்சார இணைப்பு பெறுவதற்காக ரூபா 200,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2018 யூன் மாதம் 6 ஆம் திகதி வரை மின் இணைப்பு பெறப்பட்டிருக்கவில்லை.

3.5.2.3 கச்சக்கொடி தீவு மீன் சந்தை நிர்மாணம்

மாகாண சபை மற்றும் உள்@ராட்சி அமைச்சின் பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் கச்சக்கொடி தீவு மீன் சந்தை நிர்மாணம் செய்வதற்கான ஒப்பந்தம் ரூபா 999,737 தொகைக்கு ஒரு சனசமூக நிலையத்திற்கு 2017 ஒக்தோபர் 17 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்வு மாதிரிச் சேவையின் கணிப்பீட்டின் போது மாபிள் பதித்தல், பூச்சுப் பூசுதல், தீந்தை பூசுதல் மற்றும் ஏனைய வேலைகளுக்காக ரூபா 243,906 தொகை செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் ரூபா 371,152 தொகையை உறுதிப்படுத்தி கொடுப்பனவிற்காக உள்@ராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. எனவே ரூபா 127,249 தொகை மேலதிகமாக செலுத்தப்படுவதற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) இக்கட்டடத்திற்கு நீர் மற்றும் மின்சார வசதிகள் இன்றுவரை பெற்றுக் கொள்ளாமையினால் இக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டும் பயன்படுத்த முடியாது காணப்படுகின்றது.

3.5.2.4 சனசமூக நிலையங்களுக்கு ஒப்பந்தங்களை வழங்குதல்.

நிதி ஆணைக்குழுவின் FO/3/3/2013 ஆம் இலக்க 2013 யூலை 26 ஆம் திகதிய சுற்றுநிருபத்தின் பிரகாரம் ரூபா 2,000,000 இற்கு மேற்பட்ட பெறுமதியுடைய ஒப்பந்ததங்கள் சமூக அடிப்படையிலான நிறுவனங்களிற்கு வழங்கப்பட முடியாது என்ற போதிலும் சபையினால் இச் சுற்றுநிருபத்திற்கு முரணான வகையில் ஒரே காலப்பகுதியில் அல்மதீனா சனசமூக நிலையத்திற்கு நான்கு ஒப்பந்தங்கள் ரூபா 2,198,862 தொகைக்கும், நடுத்தீவு சனசமூக நிலையத்திற்கு மூன்று ஒப்பந்தங்கள் ரூபா 3,199,306 தொகைக்கும், அல்புறூனி சனசமூக நிலையத்திற்கு மூன்று ஒப்பந்தங்கள் ரூபா 3,099,737 தொகைக்கும் வழங்கப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 07% தொடக்கம் 93% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

## 5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | i. பேரேடுகள் நாளது வரையாக முறையாக பேணப்படல்.<br>ii. சொத்துக்கள் செலவீனங்களின் தன்மை அடிப்படையில் வகைப்படுத்தப்படல். |
| (ஆ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |
| (இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படல். |
| (ஈ) ஒப்பந்த முகாமைத்துவம் | i. ஒப்பந்தங்கள் வழங்கப்படும் போது பெறுகை வழிகாட்டி பின்பற்றப்படல்.<br>ii. சன சமூக நிலையங்களுக்கு ஒப்பந்தம் வழங்கும் போது நிதி ஆணைக்குழுவின் சுற்றுநிருபம் பின்பற்றப்படல். |